## குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 27-02-2025 வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சியில் தற்போது 4342 எண்ணம் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு 2024-2025 ஆம் ஆண்டுக்கு சாலை சீரமைப்பு கட்டணம் மேற்பார்வையாளர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ஆகியவைகளை கீழ்கண்ட விபரப்படி 10 சதவீகிதம் உயர்த்தி மதிப்பீடு தயார் செய்ய அரசாணை எண்.197, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12-07-2007-ன்படி கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No | Length | Road Restoration | | | Domestic Deposit | Supervising charge | | | Domestic Total Amount 2024-2025 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2023-2024 | 10% Increase | 2024-2025 | | 2023-2024 | 10% Increase | 2024-2025 | |
| 1 | 2 | 3 | 4 | 5=3+4 | 6 | 7 | 8 | 9=7+8 | 10=5+6+9 |
| Earthern / Gravel Road | | | | | | | | | |
| 1 | 0-30m | 3198 | 320 | 3518 | 3000 | 3799 | 380 | 4179 | 10697 |
| 2 | 0-90m | 8957 | 896 | 9853 | 3000 | 9380 | 938 | 10318 | 23171 |
| C.C Road | | | | | | | | | |
| 1 | 0-30m | 16142 | 1614 | 17756 | 3000 | 6529 | 653 | 7182 | 27938 |
| 2 | 0-90m | 47312 | 4731 | 52043 | 3000 | 17556 | 1756 | 19312 | 74355 |
| B.T Road | | | | | | | | | |
| 1 | 0-30m | 16698 | 1670 | 18368 | 3000 | 6741 | 674 | 7415 | 28783 |
| 2 | 0-90m | 48978 | 4898 | 53876 | 3000 | 18910 | 1891 | 20801 | 77677 |

| Sl. No | Length | Road Restoration | | | Domestic Deposit | Supervising charge | | | Domestic Total Amount 2024-2025 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2023-2024 | 10% Increase | 2024-2025 | | 2023-2024 | 10% Increase | 2024-2025 | |
| 1 | 2 | 3 | 4 | 5=3+4 | 6 | 7 | 8 | 9=7+8 | 10=5+6+9 |
| Non Demestic Earthern / Gravel Road | | | | | | | | | |
| 1 | 0-30m | 3198 | 320 | 3518 | 6000 | 3799 | 380 | 4179 | 13697 |
| 2 | 0-90m | 8957 | 896 | 9853 | 6000 | 9380 | 938 | 10318 | 26171 |
| C.C Road | | | | | | | | | |
| 1 | 0-30m | 16142 | 1614 | 17756 | 6000 | 6529 | 653 | 7182 | 30938 |
| 2 | 0-90m | 47312 | 4731 | 52043 | 6000 | 17556 | 1756 | 19312 | 77355 |
| B.T Road | | | | | | | | | |
| 1 | 0-30m | 16698 | 1670 | 18368 | 6000 | 6741 | 674 | 7415 | 31783 |
| 2 | 0-90m | 48978 | 4898 | 53876 | 6000 | 18910 | 1891 | 20801 | 80677 |

மேற்கண்ட கட்டணம் 01-04-2024 முதல் 31-03-2025 வரை புதிய இணைப்பு வழங்க அமுல்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.2914/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.1179 நிராகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வீடுகளில் தோறும் சேகரிக்கப்படும் பயோ மெடிக்கல் கழிவுகள் மற்றும் பாம்போஸ் ஆகியவற்றை பிரித்து அப்புறப்படுத்தியமைக்கு Septic System BIO Medical Waste Management company திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு 2024-2025 நிதியாண்டிற்கு உத்தேச செலவினமாக ரூ.5,00,000/-த்தினை நகர்மன்ற தீர்மான எண்.857, நாள் 20-02-2024-ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பில்தொகை ரூ.78,399/- ஆகும். மேற்படி நிறுவனத்திற்கு இந்நாள் வரை செலவினம் மேற்கொண்டமைக்கு ரூ.4,88,189/-யினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் மீதியாக இருக்கும் தொகை ரூ.11,811/-யாக உள்ளது. தற்போது வரப்பெற்ற பில் தொகை வழங்குவதற்கு மற்றும் மாதம் ஒருமுறைக்கு ரூ.1,00,000/- வீதம் 12 மாதத்திற்கு ரூ.12,00,000/- உத்தேச செலவினமாக பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.19/2019/எச்1.

மன்றத்தீர்மான எண்.1180 12 மாதங்களுக்கு ரூ.1000000/- (பத்து இலட்சம்) பொது நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள பிரிண்டர்கள் 12A, 77A, டிரம் உள்ள Toner-கள் 25 எண்ணம் ரீபில்லிங் செய்த வகையில் தொகை ரூ.11269/-ஐ S.J.Technologs நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.180/2007/டி2

மன்றத்தீர்மான எண்.1181 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் இருக்கும் 9-41/6 A. B. C கடைமுன்பு இருக்கும் ஆட்டோ ஸ்டேன்ட் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றிட திரு.K. சிவசங்கரன் என்பவரால் மதுரை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)27580/2024-க்கு இந்நகராட்சி சார்ப்பில் வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**2874/2024/எப்1

மன்றத்தீர்மான எண்.1182 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சியின் வார்டு எண்.20 கருங்கல் சாலையில் அமைந்துள்ள தினசரி மீன்சந்தையினை வர்ணம் பூசிட குத்தகைதாரரால் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டு மேற்கண்ட மீன் சந்தையினை வர்ணம் பூசவும், பழுதடைந்த கதவுகளை சரி செய்திடவும் ரூ.2.10 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**285/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1183 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சியில் NUHM 2022-2023 திட்டத்தின்கீழ் புதிதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணி முடிக்கப்பட்ட நிலையில் மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் கூடுதலாக கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

1) தடுப்பு சுவர் அமைத்தல்
2) சுற்று சுவர் அமைத்தல்
3) படிக்கட்டில் கைப்பிடி அமைத்தல் மற்றும்
4) சாய்வு தளத்தில் கைப்பிடி அமைத்தல்

மேற்கண்ட பணி மேற்கொள்ள ரூ.38.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.272/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1184 நிராகரிக்கப்பட்டது

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான TN.74W.0236 என்ற கழிவுநீர் டாங்கர் கனரக வாகனத்திற்கு அனுமதி சான்று 02-03-2025-ல் முடிவடைவதால் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.2183/-யை Online மூலம் RTO அலுவலகத்தில் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2295/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1185 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சியில் அய்யன் திருவள்ளுவர் சிலை 25-ம் ஆண்டு வெள்ளி விழாவிற்கு இந்நகராட்சியில் நடைபெறும் திட்ட பணிகள் குறித்து பத்திரிக்கை விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட விவரப்படி விளம்பரக் கட்டணம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | தமிழ் முரசு | - ரூ. 9975 |
| 2) | தினத்தந்தி | - ரூ. 9840 |
| 3) | தினமலர் | - ரூ.16800 |
| 4) | தினமணி | - ரூ. 9975 |
| 5) | தினகரன் | - ரூ. 9975 |
| 6) | தினமுரசு | - ரூ. 9975 |
| 7) | மாலைமலர் | - ரூ. 9912 |
| 8) | குமரி முரசு | - ரூ. 9975 |
| 9) | மாலை மலர் (பொங்கல் மலர்) | - ரூ. 9912 |
| | மொத்தம் | ரூ.96339 |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விளம்பரக் கட்டணங்களை பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1186 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான TN.74V.4642 என்ற வாகனத்தினை முதிராநிலையில் கழிவு நீக்கம் செய்திட பத்திரிக்கை விளம்பரம் செய்த வகைக்கு மதுரை மணி பத்திரிக்கை நிறுவனத்திடமிருந்து ரூ.10080/-க்கான விளம்பரக் கட்டணத்துக்கான பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை மதுரை மணி பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.877/2013/இ1

மன்றத்தீர்மான எண்.1187 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு(ம)குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச்சாளர இணைய முகப்பில் (Single Window Portal) கட்டிட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை(ப)எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.1)துறை, நாள்:05.02.2025, மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31917/2019/டிபி2, நாள்.13.02.2025 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.

(அ)

| நகராட்சிகள் - குடியிருப்பு கட்டுமானம் - கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத கட்டிடங்கள் (3500 சதுரஅடிக்குமேல்) | | | ஒருங்கிணைந்தகட்டணம் | |
| **வ. எண்** | **நகராட்சியின் நிலை** | **எண்ணிக்கை** | **ரூ/சதுர மீட்டர்** | **ரூ/சதுரஅடி** |
| 1 | சிறப்புநிலை நகராட்சிகள் | 13 | 800 | 74 |
| 2 | தேர்வுநிலை | 28 | 800 | 74 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நகராட்சிகள் | | | |
| 3 | நிலை - I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை - II நகராட்சிகள் | 62 | 750 | 70 |
| கூடுதல் | | 134 | | |

அரசாணையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி கட்டண வழிகாட்டுதலின்படி வ.எண்.04 உள்ள ரூ.750.00/- சதுரமீட்டர்/ரூ.70.00 சதுரஅடி என்ற அடிப்படையில் குழித்துறை நகராட்சியில் 3500 சதுரஅடிக்கு மேல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டணங்களை வசூல் செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு (Other than self - certification buildings) 125%(1.25 மடங்கிற்கு குறையாமல் இருக்குமாறு பட்டியலில் கண்டுள்ள கட்டணத்தை நிர்ணயம் செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

| நகராட்சிகள் - குடியிருப்பு அல்லாத கட்டுமானங்கள் - கட்டண விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | நகராட்சியின் நிலை | ஒருங்கிணைந்தகட்டணம் (குடியிருப்பு) | | ஒருங்கிணைந்தகட்டணம் (குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்/(1.25 மடங்கு) | |
| | | ரூ/ சதுரமீட்டர் | ரூ/சதுர அடி | ரூ/ சதுரமீட்டர் | **ரூ/ சதுரஅடி** |
| 1 | சிறப்புநிலைநகராட்சிகள் | 800 | 74 | 1000 | 93 |
| 2 | தேர்வுநிலைநகராட்சிகள் | 800 | 74 | 1000 | 93 |
| 3 | நிலை I நகராட்சிகள் | 750 | 70 | 938 | 87 |
| 4 | நிலை - II நகராட்சிகள் | 750 | 70 | 938 | 87 |

அரசாணையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு கட்டண வழிகாட்டுதலின்படி 1.25 மடங்கு என்ற விகிதத்தில் வ.எண்.04 உள்ள ரூ.938.00/ சதுரமீட்டர்/ ரூ.87.00/ சதுரஅடி என்ற அடிப்படையில் குழித்துறை நகராட்சியில் இதர குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கட்டணங்களை வசூல் செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண்.406/2025/எப்1

மன்றத்தீர்மான எண்.1188 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024-ன்கீழ் நவீன காய்கறி சந்தையில் அமைக்கும் பணியானது நடைபெற்று வருகிறது. தற்பொழுது கட்டிட பணி நடைபெற்று வரும் பகுதியில் உள்ள உயர் கோபுர மின்விளக்கினை சந்தை வளாகத்தில் மாற்றி அமைத்திட 14-02-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின்குமார் | 0.65% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.05% குறைவான கொடுத்துள்ள M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.122/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1189 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் மேம்பாலம் மேற்கு பகுதி முடிவில் பம்மத்தில் உள்ள உயர் மின்விளக்கின் கம்பம் தனியாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே உள்ள உயர்மின் விளக்கு கம்பத்தை அதே இடத்தில் அமைத்திட 14-02-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஸ்டீபன் | 0.01% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு. ஜெயசந்திரன் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய

திரு. ஜெயசந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2847/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1190 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் பெருந்தெரு இசக்கியம்மன் கோவில் முதல் கடம்பன்கோடு வரை உள்ள பகுதியில் சாலை மற்றும் மழைநீர் அமைத்திட 14-02-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திருமதி. பியூலின் நிம்மி | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.K.G. கிருஷ்ணதாஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.03% குறைவான கொடுத்துள்ள திரு.K.G. கிருஷ்ணதாஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1743/2024/இ1.
மன்றத்தீர்மான எண்.1191 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சியில் 1 முதல் 21 வரையிலான வார்டுகளில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 8 பணியாளர்களால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவடைவதால் 2025-2026-ம் ஆண்டிற்கான பணிகள் மேற்கொள்ள 14-02-2025 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு.D. ஜஸ்டின் குமார் | 0.15% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தபுள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்ற முடிவு செய்யலாம்.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.123/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1192 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024-ன் கீழ் மின்மயானம் அமைக்கப்பட்டுள்ளது. மின்மயானத்திற்கு செல்லும் பாதையில் Paver Block கற்கள் பதிக்கவும், பெயர் பலகை மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஜெனரேட்டரை மாற்றி அமைத்திடவும் 14-02-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.D. ஜஸ்டின் குமார் | 0.03% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.06% குறைவாக கொடுத்துள்ள M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்ற முடிவு செய்யலாம்.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.3020/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1193 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் TN.75J.8227 2024-2025-ம் ஆண்டிற்கான தகுதி சான்று முடிவடைவதால் வாகனத்திற்கு F.C. பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1135, நாள் 28-01-2025-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் அங்கீகரிக்கப்பட்ட ABT நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பணியின் அவசரத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2778/2012/இ1.

மன்றத்தீர்மான எண்.1194 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.9 விளவங்கோடு சாலையில் சிறுபாலம் அமைத்திட 14-02-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயசந்திரன் | 26.35% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ். கிறிஸ்துராஜ் | 10.59% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திருமதி.பி. சரோஜா | 17.70% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக திரு. ஜெயசந்திரன் என்பவர் 26.35% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்ற முடிவு செய்யலாம்.

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்

**ந.க.எண்.**2639/2024/**இ1.**

மன்றத்தீர்மான எண்.1195 மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் தீர்மானிக்கிறது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகள் ஆகிய அனைத்துக்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ன்படி தொழில் உரிமம் பெறுவதற்கு திருத்திய கட்டணம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நிறுவனங்களுக்கு, கடைகளுக்கு தொழில் உரிமம் வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணைப்படியும் இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்.1091, நாள் 29-11-2024-ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாலும் மாவட்ட அளவிலான அரசிதழில் வெளியிடுவதற்கு உத்தேச செலவின தொகை ரூ.80,000/-யினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.**3197/2023/**எச்1**

மன்றத்தீர்மான எண்.1196 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.